செ. கு. எண்: 126 நாள்:09.10.2019

# இந்திய–சீனா நாடுகளின் பேச்சுவார்த்தைக்கு தமிழ்நாட்டிற்கு வருகை புரியவுள்ள மேதகு சீனநாட்டின் குடியரசுத் தலைவர் அவர்களுக்கும், மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்களுக்கும் சிறப்பான வரவேற்பு அளிக்க மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.எடப்பாடி K.பழனிசாமி அவர்களின் வேண்டுகோள்

இந்தியா–சீனா நாடுகளுக்கு இடையேயான நல்லுறவை மேம்படுத்த மேதகு சீன குடியரசுத் தலைவர் திரு. ஷி ஜின்பிங் அவர்களுக்கும், மாண்புமிகு பாரதப் பிரதமர் திரு.நரேந்திர மோடி அவர்களுக்கும் இடையே அக்டோபர் 11 மற்றும் 12 ஆகிய நாட்களில் நடைபெற உள்ள பேச்சு வார்த்தை, தமிழ்நாட்டிலுள்ள மாமல்லபுரத்தில் நடைபெறுவது தமிழ்நாட்டிற்கே பெருமை சேர்ப்பதோடு மட்டுமல்லாமல், தமிழ்நாட்டின் மதிப்பை உலக அரங்கில் உயர்த்தியுள்ளது. இந்த நிகழ்ச்சிக்கு தமிழ்நாட்டிலுள்ள மாமல்லபுரத்தை தேர்வு செய்தமைக்கு மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்களுக்கு நன்றி தெரிவித்துக்கொண்டு, தமிழ்நாட்டு மக்கள் சார்பாகவும், தமிழ்நாடு அரசின் சார்பாகவும் இவ்விரு உலகத்தலைவர்களையும் வரவேற்கின்றேன்.

பல நூற்றாண்டுகளுக்கு முன்பிருந்தே வணிக ரீதியாகவும், கலாச்சார ரீதியாகவும் சீனாவிற்கும், தமிழ்நாட்டிற்கும் இடையே தொடர்பு இருந்துள்ளது என்பது வரலாறு. பண்டைய சீனநாட்டின் தூதுவர் யுவான் சுவாங், பல்லவ நாட்டிற்கு வந்து சென்றிருக்கிறார் என்பதும், அக்காலத்தில் பல்லவ நாட்டின் துறைமுகமாக விளங்கிய இதே மாமல்லபுரம், இந்த நிகழ்ச்சிக்கு தேர்வு செய்யப்பட்டது மிகவும் பொருத்தமானது என நான் கருதுகிறேன். சீனநாட்டுடன் கடல் வழி வியாபாரம் மாமல்லபுரம் வழியாக நடைபெற்றதாக வரலாறு கூறுகிறது. அதே போல், சோழர்கள் காலத்திலும், சீனாவுடனான வணிக தொடர்புகள் வலுவாக இருந்துள்ளது தமிழர்களுக்கு பெருமை சேர்ப்பதாகும். ஏற்கனவே 1956–ஆம் ஆண்டு, மேதகு சீன நாட்டு பிரதமர் திரு. சூ என்லாய், மாமல்லபுரம் அருகிலுள்ள குழிப்பான்தண்டலம் கிராமத்திற்கு வருகை தந்ததை இங்கே நினைவு கூற விரும்புகிறேன்.

இந்த இரு தலைவர்களின் சந்திப்பு யூனெஸ்கோ உலக பாரம்பரிய மையமான மாமல்லபுரத்தில் நடைபெறுவது, பண்டைய வரலாற்றின் தொடர்ச்சியாகவே அமைந்துள்ளது

குறிப்பிடத்தக்கது. மேதகு சீன நாட்டு குடியரசுத் தலைவரின் வருகை, தமிழ்நாட்டுக்கு மட்டுமின்றி, இந்தியாவிற்கே வரலாற்று சிறப்பு வாய்ந்த ஒரு நிகழ்வாகும்.

தமிழ்நாட்டிற்கு வருகை புரியும் மேதகு சீன நாட்டு குடியரசுத் தலைவர் திரு. ஷி ஜின்பிங் அவர்களுக்கும், மாண்புமிகு பாரதப் பிரதமர் திரு. நரேந்திர மோடி அவர்களுக்கும், தமிழ்நாட்டு மக்கள் அனைவரும் உள்ளார்ந்த உணர்வோடு உற்சாக வரவேற்பு அளிக்க வேண்டும் என அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

**K. பழனிசாமி**
தமிழ்நாடு முதலமைச்சர்

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**